தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௯௰	மலர்
	விகாரி, ஆவணி	
௨௫	1959 ஆகஸ்டு, செப்டம்பர்.	௫

மு. ஆபிரகாம் பண்டிதர்

பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு.

தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைகட்கும் அருந்தொண்டு புரிந்து நமது நன்றிக்குரியவர்களாகத் திகழ்ந்த பெரியார்களுள் ஒருவர் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் 1859-ஆம் ஆண்டிற் பிறந்து 1919-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்த தஞ்சைப் பெருமகனார் அறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதராவார்.

அவரது முத்தமிழ்ப் பயிற்சியும் ஆராய்ச்சித்திறனும் அவர் இயற்றிய கருணாமிர்த சாகரம் என்னும் அரிய நூலிற் பரக்கக் காணலாகும். இப்பெருநூலின் வாயிலாக நம் பழந்தமிழிசை முறையினை யாவரும் வியக்கத்தக்க முறையில் முதன் முதலாக உலகுக்குணர்த்தும் பெருமை அவருக்கே உரியதாயிற்று. இசைத் துறையில் அவர் தொடங்கிய ஆராய்ச்சித்தொண்டு கலையுலகில் அவருக்கு அழியாப் புகழை அளித்துள்ளது.

ஒலியின் தெய்வத்தன்மையை உணர்ந்த பண்டிதர் இத் துறையில் தம் கருத்தையெல்லாம் ஒருங்கு திரட்டிச் செலுத்தி இசைக் கலைக்கே அடிப்படையான சில பேருண்மைகளைச் சிலப்பதிகாரம் போன்ற பழந் தமிழிலக்கியங்களிலும் அவைகளின் அரிய பழைய உரைகளிலும் கண்டு இசையுலகுக்கு விளக்கிக் காட்டியுள்ளார். பழந்தமிழர்கள் ஒலியின் தன்மையை எத்துணை நுணுக்கமாக அறிந்து இசைக்கலையுடன் அதனை இணைத்து இன்புற்றார்களென் பதை முதன் முதலாக உலகுக்கறிவித்தவர் பண்டிதரேயாவார். சிலப்பதிகாரமும் அதன் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லா ருரையும் அழிந்துபோகுமுன் பழஞ் சுவடிகளிலிருந்து அவைகளைப் பெயர்த்து வெளியிட்ட டாக்டர் உ. வே. சாமிநாதய்யருக்குத் தமிழகம் நன்றிக்கடன் பட்டிருப்பதைப் பண்டிதர் பணிவுடன் குறிப்பிடுகிறார். பண்டிதர் இயற்றிய இந்நூல் "ஆரம்பமுதல் முடிவுவரையும் பிழை திருத்தவும், தமிழ் நூலாராய்ச்சி செய்யவும் உதவியாயிருந்த" பண்டித L. உலகநாத பிள்ளைக்கும் நன்றி பாராட்டுகிறார்.

பேரறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதர்.

தோற்றம்: 2—8—1859. மறைவு: 31—8—1919.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯	மலர்
	விகாரி, ஆவணி	
௩௫	1959 ஆகஸ்டு, செப்டம்பர்.	௫

மு. ஆபிரகாம் பண்டிதர்

பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு.

தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைகட்கும் அருந்தொண்டு புரிந்து நமது நன்றிக்குரியவர்களாகத் திகழ்ந்த பெரியார்களுள் ஒருவர் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் 1859-ஆம் ஆண்டிற் பிறந்து 1919-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்த தஞ்சைப் பெருமகனார் அறிஞர் மு. ஆபிரகாம் பண்டிதராவார்.

அவரது முத்தமிழ்ப் பயிற்சியும் ஆராய்ச்சித்திறனும் அவர் இயற்றிய கருணாமிர்த சாகரம் என்னும் அரிய நூலிற் பரக்கக் காணலாகும். இப் பெருநூலின் வாயிலாக நம் பழந்தமிழிசை முறையினை யாவரும் வியக்கத்தக்க முறையில் முதன் முதலாக உலகுக்குணர்த்தும் பெருமை அவருக்கே உரியதாயிற்று. இசைத் துறையில் அவர் தொடங்கிய ஆராய்ச்சித் தொண்டு கலையுலகில் அவருக்கு அழியாப் புகழை அளித்துள்ளது.

ஒலியின் தெய்வத்தன்மையை உணர்ந்த பண்டிதர் இத் துறையில் தம் கருத்தையெல்லாம் ஒருங்கு திரட்டிச் செலுத்தி இசைக் கலைக்கே அடிப்படையான சில பேருண்மைகளைச் சிலப்பதிகாரம் போன்ற பழந் தமிழிலக்கியங்களிலும் அவைகளின் அரிய பழைய உரைகளிலும் கண்டு இசையுலகுக்கு விளக்கிக் காட்டியுள்ளார். பழந்தமிழர்கள் ஒலியின் தன்மையை எத்துணை நுணுக்கமாக அறிந்து இசைக்கலையுடன் அதனை இணைத்து இன்புற்றார்களென் பதை முதன் முதலாக உலகுக்கறிவித்தவர் பண்டிதரேயாவார். சிலப்பதிகாரமும் அதன் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லா ருரையும் அழிந்துபோகுமுன் பழஞ் சுவடிகளிலிருந்து அவைகளைப் பெயர்த்து வெளியிட்ட டாக்டர் உ. வே. சாமிநாதய்யருக்குத் தமிழகம் நன்றிக்கடன் பட்டிருப்பதைப் பண்டிதர் பணிவுடன் குறிப்பிடுகிறார். பண்டிதர் இயற்றிய இந்நூல் "ஆரம்பமுதல் முடிவுவரையும் பிழை திருத்தவும், தமிழ் நூலாராய்ச்சி செய்யவும் உதவியாயிருந்த" பண்டித L. உலகநாத பிள்ளைக்கும் நன்றி பாராட்டுகிறார்.

"கர்நாடக இசைமுறையில் ஒரு ஸ்தாயி 12 சம பாகங்களாகப் படுகிறதென்பதும் கணக்கற்ற இந்திய இராகங்கள் இந்த 12 சுரங்களிலேயே பாடப்படுகின்றன வென்பதும் கிரகமாற்றும் பொழுது இப்பன்னிரண்டு சுரங்களிலிருந்து வெவ்வேறு இராகங்கள் பிறக்கின்றன வென்பதும் இந்திய சங்கீதம் ஒழுங்கற்ற இடைவெளிகளுள்ள சுரங்களாலானதென்று கொள்வது தவறு" என்பதும் பண்டிதரின் கொள்கையாகும். இக்கொள்கையினைத் தஞ்சையிற் கூடிய பல மாநாடுகளிலும் பரோடாவிற் கூடிய அனைத்திந்திய இசை மாநாட்டிலும் வீணையிலிசைத்து விளக்கி, மாநாடுகளிற் கலந்து கொண்டவர்களிற் பெரும்பாலோருடையவும் மைசூர் சேஷண்ணா, விஜயநகரம் வேங்கடரமணதாசர் முதலிய இசை வல்லுநருடையவும் ஆதரவைப் பெற்றார்.

'வரன்முறை மருங்கின் ஐந்தினு மேழினும்
உழைமுத லாகவும் உழை யீருகவும்
குரல்முத லாகவும் குரலீ ருகவும்'

என்பதனால் ஒரு ஸ்தாயியில் வரும் 12 சுரங்களும் சம அளவான ஓசையுடையன வென்பதும் இப் பன்னிரண்டு சுரங்களும் Geometrical Progression படியே வரவேண்டுமென்பதும் அவருடைய கருத்தாகும். "ஒரு ஸ்தாயியில் 22 அலகுகள் என்று சொன்ன நூல் முறைப்படி பொருள் செய்து அலகு மாற்றியும் ச–ம ஐந்தும் ச–ப ஏழுமான ராசிகளில் வரும் மறைப்பு நீங்கிய முறையில், ஒரு ஸ்தாயியில் 24 அலகுகள் வருகின்றன வென்றும் 2 அலகு குறைத்துச் சுகமாய் யாழில் வாசிக்கும் பொழுது 22 அலகுகளென்றும், இது 'உய்த்துணரவைப்பு' என்ற நூல் மரபென்றும் சொல்லி, இம் மறைப்பு நீங்கியபின் ஏழு தாய் இராகங்கள் உண்டாகும் முறையையும் மத்திமத்தின் இரண்டு அலகை குரலில் வைத்துப் பன்னிருகால் கிரகமாற்றும் பொழுது உண்டாகும் பன்னிருபாலை ராகங்களையும், அவைகளுக்குத் தற்காலத்தில் வழங்கும் பேர்களையும்" மேற்கோள்களுடன் மிக மிக விரிவாகக் கருணாமிர்த சாகரம் விளக்கிக்காட்டுகிறது. ச ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்களின் பெயர் தமிழ்ப்பெயரே, வடமொழிப் பெயரல்ல வென்பதும் அவருடைய முடிபாகும்.

இனிய தமிழாம் நம் தாய்மொழியிடத்தும், பழந் தாயகமாம் நம் தமிழகத்தும், தலைசிறந்தனவாம் நங்கலைக் கருவூலங்களிடத்தும் பண்டிதர் காட்டிய அன்பும் கொண்ட பெருமிதமும் அளவிறந்தன.

"தமிழ்ப் பாஷை உண்டான காலமே கர்நாடக சங்கீதம் உண்டான காலமாம். தமிழ் பாஷைக்குரிய இனிமையே தென்னிந்திய சங்கீதத்தின் இனிமையாம். தமிழ் பாஷை எப்படி அன்னிய பாஷையோடு கலவாத தனித்த பாஷையோ அப்படியே தென்னிந்திய சங்கீதமும் மற்ற சங்கீதங்களோடு கலவாமல் தனித்த விதிகளுடையதாம்". [கருணாமிர்த சாகரம்—ப. 39.]

தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிப் பண்டிதர் கூறியுள்ள பல செய்திகள் அறிந்து மகிழத் தக்கன.

"உலகச் சரித்திரங்கள் எழுதப்படுவதற்கு முன்பும், மற்ற தேசத்தார் நாகரீகமுடையவர்களாகுவதற்கு முன்னும், அழிந்துபோன லெமூரியாக் கண்டத்திலுள்ளோர் நாகரீகமுடையவர்களாக இருந்திருக்கவேண்டுமென்று சரித்திரக்காரர் சொல்வதற்கிணங்க, அக்கண்டத்திலுள்ள தென்மதுரையும், அதில் அரசாண்டு வந்த பாண்டிய அரசர்களும், சங்கப் புலவர்களும் பேசிவந்த பாஷையாகிய தமிழும், மிகுந்த தொன்மையும் தனிச் சிறப்பும் வாய்ந்தவைகள். [ஷை ப. 39.]

தொல்காப்பியர் காலத்துக்கும், அகத்தியர் காலத்துக்கும் முன்னதாகவே தமிழ் மொழி பெருவளர்ச்சி யுற்றிருந்ததென்றும், தமிழ் மொழியில் உயர்ந்த நூல்கள் செய்யப்பட்டிருந்தன வென்றும், கீழ்க் காணும் மேற்கோள் முதலியன காட்டித் தமிழின் தொன்மையை வலியுறுத்துகிறார்:

"இலக்கண மென்ப திலக்கிய முறையுற
வைத்த தென்று வழங்கப் படுமே".

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக் கியத்தினின் றெடுபடு மிலக்கணம்".

(பேரகத்தியம்)

இந்நூலில் பண்டிதர் சோழநாட்டு வரலாற்றை, கரிகாலன் முதலாக (இடையிருட் காலங்கள் நீங்கலாக) பல்லவர், பிற்காலச் சோழர், நாயக்கர், மராத்தியர் ஈறாகச் சுருக்கமாகத் தந்துள்ளார். இராசராசனின் கல்வெட்டுச் சாசனங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறே பாண்டியர் வரலாறும், அவர்களின் கல்வெட்டுச் சாசனங்களும் காணப்பெறுகின்றன.

பிற்காலச் சோழர்காலத்தில் தஞ்சைப் பெரியகோவிலில் நடனம் செய்பவர்கள் (நக்கன் அம்பலக்கூத்தி, நக்கன் அனந்து, நக்கன் வழுவா நிலை, நக்கன் சீதேவி, நக்கன் சிவதேவி போன்ற நானூற்றுவர்), பிடாரர், கொட்டிமத்தளம், உடுக்கை வாசிப்போர், பண்ணோடும் பக்கவாத்தியத்தோடும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வோர், கானபாடி, முகவீணைக்காரர், வீணைவாசிப்போர், ஆரியம் பாடுவார் (சமஸ்கிருதப் பாட்டுப் பாடுவோர்—வேதமோதுபவரல்லர்) தமிழ்ப் பாடுவோர், முத்திரைச் சங்கு ஊதுவோர், காந்தருவர் (பாடுந்திறமையுள்ள அழகர், அழகிகள்—தேவலோகத்தவரல்லர்)—ஆகிய பலரைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அச்சுதப்ப நாயக்கரின் அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மகன் இசையறிஞர் வேங்கடமகி பற்றியும் இசைப்புலமை சான்ற மராத்திய மன்னர் துளஜாஜியும் அவர் அரசியாரும் புரந்த செந்தில்வேல் அண்ணாவி மகன் மகாதேவனைப் பற்றியும், இம்மகாதேவனின் வமிச பரம்பரையும் சீட பரம்பரையும் தமிழ் நாட்டிற் பரவிய செய்தி பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. "தென்னிந்திய சங்கீதத்தில் தேர்ந்த புலவர்

பெருமக்களின் பெயரும் முக்கிய குறிப்புகளும்" அகர வரிசையாக 55 பக்கங்களை நிரப்பி மகிழ்ச்சியளிக்கின்றது.

பாண்டிய அரசர் முத்தமிழ் போற்றிய செய்தி அவர்களுடைய சாசனங்களிலிருந்தே கீழ்க்காணும் மேற்கோள்கள் காட்டி நமக்கு அறிவிக்கப்படுகிறது:

"இன்னமு தாகிய இயலிசை நாடகம்
மன்னி வளர மணிமுடி சூடி".

"மயலறு சிறப்பின் மாமுனி தேர்ந்த
இயலிசை நாடகம் எழில்பெற வளர".

"மூவகைத் தமிழும் முறைமையின் விளங்க
எழுவகைப் பாடலும் இசையுடன் பரவ".

தமிழிசை வளர்த்த புலவர்கள், புரவலர்களைப் பற்றிப் பெருமளவிற் பேசும் கருணாமிர்த சாகரத்தில் "சங்கீத பரம்பரையிற் சொல்லப்படாமல் விட்ட பலர்" என்ற தலைப்பில் இவ்வரிய கலையை உயிரேபோற் போற்றி வறுமை முதலிய இன்னல்களுக்குமிடையே வளர்த்து வாழவைத்த "ஏராளமான ஓச்சர், அண்ணாவிகள், நாகசுரக்காரர், தவுல்காரர், மிருதங்கக்காரர், வீணைக்காரர், காந்தர்வர்கள், தேவதாசிகள், நடனமாதர்கள்" என்று அழைக்கப்படும் எல்லா வகுப்பார்களும் பாராட்டப் பெறுகின்றனர். இதனால் பண்டிதரின் அன்புள்ளமும், உண்மை நாட்டமும் தெளிவாகக் காணப்படும். இப்பாராட்டுரை கீழ்வருமாறு:

"சங்கீதத்தின் முக்கிய அம்சமாகிய பாவ, ராக. தாளங்களில் மிகத்தேர்ச்சி பெற்றவர்களாகிய இவர்களே பூர்வம் முதற்கொண்டு சங்கீதத்தைக் கற்று, அதையே தங்களுக்கு ஜீவனமாகக் கொண்டவர்களென்று நாம் யாவரும் அறிவோம். அவர்களுள் வீணை வாசிப்போர் ஏராளமாயிருந்தார்களென்றும், மிகச்சிறந்த வித்வான்களாயிருந்தார்களென்றும், 2000 வருஷங்களுக்கு முன்பே *** சோழன் காலத்திலிருந்த மாதவியின் திறமையாலும், காந்தர்வதத்தையார் வீணா கானத்தாலும், நாம் அறிகிறதோடு தற்காலமும் அப்படிப்பட்டவர்களிருக்கிறார்களென்றும் அறிவோம். அவர்கள் பெயர் விபரங்கள் எனக்குக் கிடைக்கத் தாமதித்ததனால் இங்கே காட்டக்கூடவில்லை. சங்கீதத்திற்கேயுரிய இவர்களிடமிருந்தே மற்ற யாவரும் கற்றுக்கொண்டார்களென்று பூர்வமுதல் காணக்கிடக்கின்றது. *** *** *** சங்கீதத்தில் நல்ல பிழைப்பிருக்கிறதென்று யாவரும் கற்றுக்கொள்ள ஆரம்பித்த காலம் மிக சமீபமானதென்றே சொல்லவேண்டும் *** *** என்றாலும் பகவான் நாமத்தைச் சொல்லுகிறவர்களையும் அதைப் பிரஸ்தாபப்படுத்துகிறவர்களையும் ஒருவாறு நாம் ஒப்புக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது.

[கருணாமிர்த சாகரம்—ப. 231]

தமிழாக்கமே நமது பெருநோக்கமாகக் கருதப்படும் இந்நாளில் அறிஞர் ஆபிரகாம்பண்டிதரைப்போன்ற முன்னோரைய தமிழன்பர்களை, தமிழாராய்ச்சியாளர்களை, தமிழ் வீரர்களை நன்றிப் பெருக்கோடு நினைந்து போற்றுவது நமது கடமையாகும்.

சி. வேதாசலம்.

தண்டியாசிரியர்.

[புலவர் நா. **விசுவநாதன்**, அறந்தாங்கி]

மக்களின் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப உளவளர்ச்சி ஏற்படும். உளவளர்ச்சிக்கு இயைய அவர்தம் மொழிவளம் பெருகும். அம் மொழி வளர்ச்சியை அவ்வக்கால இலக்கியங்களால் நன்கு அறியலாம். இலக்கிய வளர்ச்சியின் மலர்ச்சிக்கு ஏற்ப ஓர் வரையறை வேண்டு மன்றோ? இதனை யடியொற்றி எழுந்தனவே இலக்கண வளர்ச்சி எனலாம்.

ஒரு கருத்தைக் கூறுகின்றவர் அதனை வெற்றெனக் கூறாது சுவைபடக் கூறினாற்றான் கேட்பவர் விரும்பிக் கேட்பர். இன்றேல் அதில் கருத்தின்றியே கேட்பர். கேட்ட கருத்தினையும் விரைவில் மறந்திடுவர். நற்சுவை பொதுளப் புனைந்துரைக்கின் ஆவலுடன் கேட்டுப் பின் தாமும் பல்கால் சொல்லிச்சொல்லி இன்புறுவர். புதுக் கருத்துக்களைக் கூறத் தொடங்கிய புலவர்கள் புதுபுதுச் சுவை களுடன் தம் இலக்கியங்களில் வெளியிடலாயினர். இம்முறையில் தொல்காப்பியருக்குப் பின் எழுந்த இலக்கியங்களிற் கண்ட சுவை களையும் ஓர் வரையறைப் படுத்தவேண்டியதும் இன்றியமையாத தாயிற்று. இந்நிலையில் உருவாகியதே பிற்காலத்திய பல இலக்கண நூற்களாகும்.

தொல்காப்பியர் தம் நூலில் பாவிலமைந்த அணிகளை உவமை, உருவகம் என இருவகைப்படுத்திக் கூறியுள்ளார். இவருக்குப்பின் தமிழில் பதினோராம் நூற்றாண்டுவரை அணியைப் பற்றிக் கூறும் இலக்கண நூற்கள் வளர்ச்சியுறவில்லை. கி. பி. 1063 முதல் 1070 வரை சோழப் பேரரசை யாண்டு வந்தவன் வீர ராசேந்திரனாவன். இவன் காலத்தில் மிழலைக் கூற்றத்திலிருந்த பொன்பற்றி என்னும் ஊரினை யாண்ட சிற்றரசன் புத்தமித்திரன் என்பவர் ஐவகை இலக் கணங்களும் ஒருங்கமைந்த 'வீரசோழியம்' என்ற ஓர் நூலியற்றினார். அது பெரிதும் வடமொழியை ஒட்டிய இலக்கணமாக அமைந் தமையால் தமிழர் அதனை ஏற்று மேற்கொள்வாரல்லராயினர். அதனால், வழக்கொழிந்தது.

கி. பி. 1133 முதல் 1145 வரை சோழப் பேரரசனாக விளங்கியவன் இரண்டாம் குலோத்துங்கனாவன். இவன் முதற் குலோத்துங்கனின் பெயரனாவன். இவன் காலத்தில் தமிழ் நல்ல வளர்ச்சியுற்றது எனல் புனைந்துரை யன்று; மெய்யுரையே யாகும். இவன் அவையை அணிசெய்த புலவர்கள் ஒட்டக்கூத்தர், சேக்கிழார், தண்டியார், பேராசிரியர், நேமிநாதர் முதலியோராவர். இவர்களைக்கொண்டு குலோத்துங்கன் இலக்கண இலக்கியங்களை இயற்றுவித்து மொழியை வளமுறச் செய்தான்.

இரண்டாம் குலோத்துங்கன் பரந்துகிடந்த தொல்காப்பியப் பெருங்கடலை எல்லோரும் எளிதிற் கற்க முடியாதிருந்ததை எண்ணி, விரைவிற் கற்றற்குரிய முறையில் சுருக்கித் தருமாறு பேராசிரியர் நேமிநாதர்பால் வேண்டினன். அதற்கிணங்கியே பேராசிரியர் நேமிநாதர் 'நேமிநாதம்' என்ற இலக்கண நூலை யியற்றினர்.

அணியிலக்கணத் தோற்றம்:

இத்துடன் குலோத்துங்கனது உள்ளம் நிறைவெய்தவில்லை. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் 685 முதல் 705 வரைத் தொண்டை ஆண்டவன் இரண்டாம் நரசிம்ம பல்லவனவன். இவன் முதல் இராசசிம்ம பல்லவன் என்றும் அழைக்கப்படுவான். இவன் இளமையில் கற்றற்கென்றே 'காவியாதர்சம்' என்ற வடமொழி யணிநூல் தண்டி என்பவரால் இயற்றப்பெற்றது. இராசசிம்மன் இதனைக் கற்றான். இவன் வடமொழியில் சிறந்த வல்லவனானான். அதுபோல் தமிழிலும் தனி யணிநூல் யாத்தல் வேண்டும் என்ற பேரவா மன்னர்பாலெழுந்தது. அதனால், அவைப் புலவருள் ஒருவரும் வடமொழி தென்மொழிகளில் வல்லுநருமான தண்டியார் என்பவர்பால் இவ்வேண்டுகோளை விடுத்தான். அவரும் காவியா தர்சத்தைப் பெரிதும் ஒத்தும் அதனின் வேறுபட்ட பல அணி நலங் களைத் தொகுத்தும் தண்டியலங்காரம் என்னும் நூலை இயற்றினர். இதுவே தமிழில் தனியாக எழுந்த முதல் அணி இலக்கண நூலாகும். இது முற்றிலும் மொழிபெயர்ப்பாய் அமையாமல் வழிநூலாயமைந்தது.

இயற்பெயரா? காரணப்பெயரா?

தண்டி என்பது இந்நூலாசிரியருக்கு ஏற்பட்ட காரணப்பெயரா? இயற்பெயரா? என்ற ஐயவினா பலருள்ளங்களில் எழுகின்றது. காரணப் பெயரென்று கூறுவார் வடமொழித் தண்டியார் என்பவர் இயற்றிய காவியாதர்சம் என்றநூலை மொழிபெயர்த்ததனால், தண்டி யாரின் நூலை மொழிபெயர்த்தவரை அதன் சிறப்புநோக்கி அத் தண்டியாரே மீண்டும் வந்து நூல் செய்ததுபோலிருக்கின்றது என்று பாராட்டுமுகமாக இவரைத் தண்டியார் என்று அழைத்து வந்திருக் கலாம், அதனால், இவரது இயற்பெயர் மறைந்திருக்கலாம் என்பர். இவ்வாறு கருதுபவர் தண்டி என்ற பெயர் தமிழகத்து வழங்கியிருந் திருக்காது என்ற கருத்தினர் போலும்.

தண்டி [1] என்ற பெயர் தமிழகத்து வழக்கில் இவருக்கு முன்னர் இயற்பெயராக வழங்கியதுண்டா என்பதை ஆராய்வோம். சங்க காலத்தில் தண்டி என்ற பெயருடையவர் யாருமில்லை. அதற்குப் பின் வடமொழித் தண்டியாருக்கு முன்னர் யாரேனும் இப்பெயருடை யார் உள்ளனரா என்று காணவேண்டும்.

---

1. தண்டி—மானமுள்ளவன்.
"தன்சொல்லே மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்......
.... கூறு ரறம்" (அறநெறிச்சாரம்—பா. 7.)
இப்பொருளாதல் காண்க.

வடமொழித் தண்டியார் வாழ்ந்த காலம் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இறுதியும் எட்டாம் நூற்றுண்டின் தொடக்கமும் ஆகும். அக்காலத்து வாழ்ந்த சைவ நாயன்மாருள் சுந்தரரும் ஒருவராவர். அவர் பாடிய திருத்தொண்டத்தொகை என்ற பதிகத்தில் தமக்கு முன்னும் தம் காலத்தும் வாழ்ந்த சிறந்த நாயன்மார்கள் பலரைக் கூறியுள்ளார். அவருள் ஒருவர் **தண்டியடிகள்** என்பவராவர். இவர் திருவாரூரில் வாழ்ந்துவந்தார். இவரை, 'வம்பரு வரிவண்டு' என்ற பாடலில் "நட்டமிகு **தண்டிக்கும்** மூர்க்கற்கும் அடியேன்" என்று கூறியுள்ளார். சேக்கிழார் "தண்டியடிகள் பிறக்கும் பெருமைத் தவமுடையார்" என்று கூறியுள்ளார். இதனுல், தண்டி என்ற பெயருடையார் பலரிருந்தனர் என்பதும், வெவ்வேறிடத்தில் வாழ்ந்தனர் என்பதும் புலனுகும். தண்டி யலங்காரத்தை இயற்றிய இப்புலவர் பெருமானும் 'தண்டி' என்ற இயற்பெயரினரேயாம் என்று துணியலாம். எனவே, இவரியற்றிய நூலும் இவர் பெயராலேயே வழங்கப்பெற்றது என்று கோடலே சாலும். இவர் காலத்தில் வாழ்ந்த நேமிநாதர் இயற்றிய நூல் 'நேமிநாதம்' என்பது போலவே இப்பெயர் அமைதலும் இயற்கையேயாகும்.

கம்பரின் பெயரரா ?

இத்தண்டியாரைப் பற்றிய ஏனைய வரலாறுகள் முழுவதும் நன்கு விளங்கவில்லை எனினும் சில புலனுக முடிந்தது நல்வினைப்பயனே எனலாம்.

தண்டியலங்கார நூலிற்கு ஒரு பாயிரம் சில ஏடுகளில் காணப்படுகின்றது. அது மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பில் வெளிவந்துள்ள பெருந்தொகை என்ற நூலுள் காணப்படுகின்றது. ஆனுல், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் பதிப்புக்களில் காணப் பெறவில்லை. அப்பாயிரம்,

"வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்
அணிபெறு மிலக்கணம் அரிதினில் தெரிந்து
வடநூல் வழிமுறை மரபினில் வழாஅது
ஈரிரண் டெல்லையி னிகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பியன் அவையத்(து)
அரும்பொருள் விளங்க யாப்பின் வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்

வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பி காபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே".
(பெருந்தொகை 1564)

என்பது.

இப்பாயிரத்தில் தண்டியார் அம்பிகாபதி என்பவரது மகனாராவர் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வம்பிகாபதி கம்பரது மகனாராவர்; எனவே, தண்டியார் கம்பரின் பெயரராவர் என்று சிலர் கூறு கின்றனர். இதனை ஆராய்வோம்.

'கம்பரது காலம் உத்தமசோழன் காலமாகிய கி. பி. பத்தாம் நூற்றுண்டு எனலாம்' என்று அண்ணுமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழா வெளியீடான கம்பராமாயணம் சுந்தரகாண்டப் பதிப்பில் கூறப் பட்டுள்ளது. வேறு சிலர் கி. பி. 12ஆம் நூற்றுண்டின் இறுதி மூன்றும் இராசேந்திரன் காலமாக இருக்கலாம் என்பர். அப்படி யாயின் இவ்விரு காலங்களுள் எதனையடுத்துத் தண்டியார் இருந்தார் என்பதனை ஆராய்வாம்.

கம்பர் பத்தாம் நூற்றுண்டில் இருந்திருந்தால் அவர் பேரர் பதினேராம் நூற்றுண்டில் அதாவது முதல் இராசராசன் அல்லது முதல் இராசேந்திரன் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். அவ்வா றிருப்பின் அவர்களது போர்த்திறனையும் கடல்கடந்த வரலாற் றினையும் தம்நூலுள் குறித்திருத்தல்வேண்டும். எப்புலவனும் தன்னைப் புரந்தவரை இலக்கியங்களில் இடம்பெறச்செய்து சிறப் பித்தல் இயல்பு. தன்னைப் பேணிய இப்பேரரசர்களைக் குறிப்பிடாமல் இருக்கமுடியுமா? பிற்காலச் சோழப் பேரரசில் மங்காப் புகழ்பெற்ற இவர்களைப்பற்றிக் குறிப்பிடாமல் அவர்களால் புரக்கப்பெற்ற புலவன் ஒருவன் இருந்தான் என்றுல் அவனைப்போல் நன்றி கொன்றுன் வேறு யார் இருத்தல் இயலும்? தண்டியலங்காரத்தில் இவர்களைப் பற்றிக் கூறப்படவில்லை. எனவே, இவர் பதினேராம் நூற்றுண் டினர் அல்லர் என்பது பெற்றும்.

(தொடரும்)

சடைய வர்மன்-
பராந்தக பாண்டியன் செப்பேடுகள் *

(கி. பி. 880—900.)

S. திருஞானசம்பந்தன், M. A.,
வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பக்கம் 5.

ஓங்குதிரை வியன்பரப்பில் உததிஆ லயமாகத்
தேங்கமழு மலர்நெடுங்(2)கட் டிசைமகளிர் மெய்காப்ப
விண்ணெனன்பெய ரேயணிய மேகதாலி விதானத்தின்
ற(3)ண்ணிழற்கீழ் ஸஹஸ்ரபண மணிகிரணம் விளக்கிமைப்ப
புஜங்கம்புரஸ் ஸரபோகி எ(4)ன்னும்பொங் கணைமீய்மிசைப்
பயந்தருதும் புருநாரதர் பனுவனரப் பிசை(5)செவிஉறப்
பூதலமக ளொடுபூமகள் பாதஸ்பர் ஸனைசெய்யக்
கண்படுத்த கார்வண்ண(6)ன் றிண்படைமால் ஸ்ரீபூபதி
ஆதிபுருஷன் அமரநாயகன் அழகமைநா பிமண்ட(7)லத்துச்
சோதிமர கததுளைத்தாட் சுடர்பொற்ரு மரைமலர்மிசை
விளை(8)வுறுகளங் கமணியின்மேன் மிளிர்ந்திலங்கு சடைமுடிஓ
டளவியன்ற கமண்ட(9)லுவோ டக்ஷமாலை ஒடுதோன்றின
சதுர்ப்புஜந் சதுர்வ் வக்த்ரநசதுர்வ் வேதிசதுர்த்வயா(10)க்ஷந்
மதுக்கமழ்மலர்க் கமலயோனி மனந்தந்த மாமுனி அத்ரி
அருமரவிற் பல்கால(11)ந் தவஞ்செய்வுழி அவன்கண்ணி
லிருள்பருகும் பெருஞ்சோதி இந்துகிரணந் வெளிப்ப(12)ட்
மற்றவற்கு மகனுகிய மனுநீள்முடிப் புதனுக்கு [டனான்
கற்றைச்செங் கதிர்க்க(13)டவுள் வழிவந்த கழல்வேந்தன்
ஏந்தெழிற்ரேள் இளன்ஞெருநா ளீசனது சாபமெய்(14)தி
பூந்தளவ் மணிமுறுவற் பொன்னுகிய பொன்வயிற்றுள்
போர்வேந்தர் தலைபனிப்ப வந்(15)து தோன்றிய புரூரவாப்பின்
பார்வேந்த ரெனைப்பலரும் பார்காவல் பூண்டுய்த்தபின்
திசை(16)யானையின் கும்பகூடத் துலவியசெழு மகரக்குலம்
விசையொடுவிண் மீன்ஞெடுபோர்(17) மிக்கெழுந்த கடற்றிரை
சென்றுதன்சேவடிப்பணிய அன்றுநின்ற ஒருவ(18)ன்பின் [கள்
விஞ்சத்தின் விக்ஞாபனை யும்பெறலரு நகுஷன்மதவிலாசமும்

---

* இச்செப்பேடுகளின் புகைப்படங்கள் திருநெல்வேலி இந்து கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் கு. அருணசலக் கவுண்டர் அவர்களிடமிருந்து ஏழு ஆண்டுகளுக்கு முன் கிடைத்தன. இவற்ருல் அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் அடுத்த மலரில் வெளியிடப்பெறும்.

பக்கம் 6.

வஞ்சத்தொழி(19)ல் வாதாபி சீராவியு மஹோததிகளின்
சுருங்காத பெருந்தன்மையும் சுகேது(20)சுதை சுந்தரதையு
மொருங்குமுன்ன மடிநண்ண திருமேனி உயுதலத்தோன்
ம(21)டலவிழ்ஆ மலுய்த்து மாமுனிபுரோ கிதன்னுகக்
கடல்கடைந் தமிர்துண்ணவுங் க(22)யலிணைவட வரைப்பொறித்
[தும்
ஹரிஹயந தாரம்பூண்டு மவன்முடிஒடு வளை(23)உடைத்தும்
விரிகடலேவே லின்மீட்டும் தேவாசுரச் செருவென்றும்
அகத்திய(24)னெடு தமிழாய்ந்தும் மிகத்திறனுடை வேந்தழித்
[துந்
திசவதனன்... .நினுக்குச் சந்துசெய்(25)துந் தார்த்தராஷ்டிரர்
படைமுழுதுங் களத்தவிய பாரதத்துப் பகடோட்டியும்
மடைமி(26)குவேல் வாணர் அநுஜன் வசுசாப மகல்வித்தும்
........தொன் னகரழித்தும் பரிச்சந்தம்(27)பல கவர்ந்தும்
நாற்கடலொரு பகலாடியும் கோடிபொன் னியதிநல்கிக்
கலைக்(28)கடலைக் கரைகண்டுபொன் பகடாயிரம் பரனுக்கீயும்
உரம்போந்ததிண் டோள(29)ரைசுக சுரம்போகித் துறக்கமெய்தி
[யும்
பொன்னிமயப் பொருப்பதனில் த(30)ன்னிலையிற் கயலெழுதி
வாயல்மீ மிசைநிமிர்ந்து பலவேண்(31)டி விருப்புற்றுங் [யும்
காயல்வாய் கடல்போலக் குளம்பலவின் கரையுயரி(32)யும்
மண்ணதிரா வகைவென்று தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனில் லருந்தமிழ்(33)நற் சங்கம்இரீஇத் தமிழ்
[வளர்த்தும்
ஆலங்கானத் தமர்வென்று ஞாலங்காவல் நன்(34)கெய்தி
கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங்களைந்தும் [யும்
முடிசூடி முர(35)ண்மன்னர் எனைப்பலரு முனிகந்தபின்
இடையாரையும் எழில்பேணவைக் கூட்டி(36)யினிய வெல்
[கொடிஎடுத்த
குடைவேந்தர் திருக்குலத்துக் கோமன்னர் பலரொ(37)ழிந்த
காடவனைக் கருவூரில் கால்கலங்கக் களிறுகைத்த [பின்
கூடலர்கோன் ஸ்ரீவரகுண(38)ன் குறைகழற்கோச் சடை
சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் ஸ்ரீவல்லபன் [யற்குச்
மே(39)யபோயந் தோளியர்கள் வித்யாதர ஹிரண்யகர்ப்ப

பக்கம் 7.

குண்ணவல மாவென்றுங் குரைகடலீ(40)ழங்கொண்டும்
விண்ணுள வில்லவற்கு விழிஞத்து விடைகொடுத்தும்

காடவருக் கட(41)லானூர்ப் பீடழியப் பின்னின்றுங்
குடகுட்டுவர் குணசோழர் தென்கொங்கர் வடபுலவர்
(42)அடலழிந்து களஞ்சேர அமர்வல்லான் மகன்படத்தன்
களிறென்று வண்குடையதைக் கதி......காட்டி(43) யமபுரசீலன்
ஒளிறிலேவே லதுபாய பகு.....லன் உம்பர்வான் உலகணைந்த
[பின்
மற்றவற்(44)கு மகனாகிய கொற்றவனங் கோவரகுணன்
பிள்ளைபிறை சடைக்கணிந்த விடையேறி(45) எம்பெருமானை
உள்ளத்தி லினிதிருவி உலகங்காக் கின்றநாளில்
அரவரைச(46)ன் பல்லூழி ஆயிரமா யிருந்தலையால்
பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும்போஹ மண்(47)மகளைத்தன்
தொடித்தோளில் லெளிதுதாங்கிய தொண்டியர்கோன் றுளக்
[கில்வி
ய(48)டிப்படைமா னுபரணன் திருமருகன் மயிலையர்கோன்
பொத்தப்பிக் குலச்சோழ(48)ன் புகழ்தருசிரீ கண்டராசன்
மத்தமா மலைவலவன் மதிமகளக் களநிம்மடி
(50)திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தக மஹராஜன்
விரைநாமத்தேர் வீரக(51)ர்ணன் முன்பிறந்த வேல்வேந்தனைச்
செந்தாமரை மலர்ப்பழனச் செழுநிலத்(52)தைச் செருவென்
[றுங்
கொந்தகபூம் பொழிற்குன்றையுங் குடகொங்கினும் (53)பொக்
[கரணியும்
தென்மாயனுஞ் செழுவெண்கையு பராந்தகன்னுஞ் சிலைக்
[கணி(54)ர்ந்த
மன்மாய மாமிகுத்தவர் வஸ்துவா ஹனங்கொண்டும்
ஆறுபல தான்கண்டும்(55) அமராலயம் பலசெய்துஞ்
சேறுபடு வியன்கழனித் தென்விழிஞ நகர்கொண்(56)டுங்
கொங்கினின்று தேனூரளவும் குடகொங்க ருடல்மடிய
வெங்கதிர்வேல் வலங்கொ(57)ண்டும் வீரதுங்கனைக்
[குசைகொண்டும்
எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறந்த தேவ(58)தானமும்
எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தி லியற்றுவித்தும்
நிலமோங்கு(59)ம் புகழாலுங் நிதிவழங்கு கொடையாலும்
வென்றிப்போர்த் திருவாலும் வேல்வே(60)ந்தரில் மேம்
[பட்ட
கதிரார்கடுஞ் சுடரிலைவேல் கலிப்பகை கண்டகோன்
(கண்டன்)
மதுரா(61)புர பரமேஸ்வரன் மாநிமகர கேதநன்மன்

செங்கோல்யாண்டு ஆருவதின் மேல்நின்ற(62)தொடர் [யாண்டில்
பொன்சிறுகா மணிமாடப் புரந்தரனது நகர்போன்ற
களக்குடி(63)நா டதனிற்படும் களக்குடிவீற் றிருந்தருள
பக்கம் 8.
ஆசிநா டதனிற்படும் பிரம(64)தேய மகன்கிடக்கைத்
தேசமலிதிரு மங்கலமிது பண்டுபெரு நலனுட்
(65)படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை
யொடெழுந்த முதுகொம்பர்க்(66) கொடைமுந்து கிடந்ததனைக்
கற்றறிந்தோர் திறல்பரவக் களப்பாழரைக் களைகட்(67)ட
மற்றிரடோண் மாக்கடுங்கோன் மானபேர்த் தளியகோன்
ஒன்றுமொழிந் திரணடோம்(68)பி ஒருமுத்தீ யுள்பட்டு
நன்றுநான் மறைபேணி ஐய்வேள்வி நலம்படுத்து
அறுதொழி(69)ற்கள் மேம்பட்ட மறைஓர்பங் கிருவர்க்குக்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமை(70)த்துச்
செப்பேடுசெய்து குடுத்தருளினன் தேர்வேந்தனின் குல [முதல்வன்
மைப்படுகண்(71) மடமகளிர் மணவேள்மனு ஸமானன்
வழுவாத செங்கோனடவி மண்மகட்கொரு கோவாகிக்
க(72)முதூரில் சித்திசெய்த கடிக்கூட னகர்காவலன்
சோமாசி குறிச்சியிது தொல்லை(73)மேற்படி கிடந்ததனை
ஸோமபான மநோசுத்தராகிய காடகசோம யாஜியார்க்கு
யா(74)கபோக மதுவாக எழிற்செப்பேட் டொடுகுடுத்தனன்
ஆகியஇவ் வூரி(75)ரண்டின் செப்பேடு மறக்கேட்டில்
இழந்துபோ யினவென்றும் ஏதமில்சோ(76)மாசி குறிச்சிச்
செழுந்தகைய நிலத்துப்படும் நிலத்தைக் கடற்றிரு(77)க்கைய்
கீழ்வன மணிதருபெரு நான்கெல்லை இட்டுக்கொண்டு
மற்றதனை மதுர(78)கர நல்லூரென்று பேரிட்டுக்
குடிநிலனு கக்கொண்ட நிலமதுவும் அவ(79)......கூடி
நிலனுகேய்ந் தவிரயிது தொண்டுசோ மாசிகுறிச்சி
மேலைபுரவேற்ப பெ(று)வெதெ(80)ன்றும் சொல்லியவூ ரிரண்டுந் [தம்மி
லெல்லைகலந்து கிடக்குமாதலில் ஒன்ருக வு(81)தவுமென்றும்
வாசநாள் மலர்கமழ்பொழில் லாசிநாட்டுள்......மாகிய
கருவமைந்த கன(82)கமாளிகைத் திருமங்கல நகர்த்தோன்றல்
சோமாசிகுறிச்சி என்னுங் காமர்வண் பதி(83)காவலன்
வடிவமைவாந கோத்திரத்து பௌதாயந சூத்திரத்துக்

குடியினனுக வெளிப்ப(84)ட்டு குணகணங்கட் கிடமாகி
மறைநான்கின் துறைபோகிய மாயானமவி பட்டற்கு(85)ச்
சிறுவனுகிய பெருந்தகைஓன் றிசைமுகன்வெளிப் பட்டனை
தர்ம்ம வத்சலன் [(86)யன்
மாயநாரா யணபட்டர் மஹாபந்நி வயிறுயிர்த்த

பக்கம் 9.

சேயான திருத்தகைஓன் ஸ்ரீ(87)நாராயணங் கேசவன்
கல்விக்கடல் கரைகண்டு மக்ஷத்தியான மதமுணர்ந்து
சொல்வித்தக(88)ந் தனதாக்கி சத்சீலா சாரனுகி
மீனவன் வீரநாரணற்கு விஸ்வாச குணங்கட்
கான(89)தன்மைய ஞுதலில்லரு ளறிந்துவிண் ணப்பஞ்செய
மதுரதர நாணுளனும் வள(90)ம்பதிசோ மாசிகுறிச்சி
அதன்மேலே புரவேற்றி ஆங்கதுந்திரு மங்கலமும்
(91)உடன்கூடப் பிடிசூழ்வித் துலகறியக் குடுத்தருளினன்
வடங்கூடு முலைமக(92)ளிர் மன்மதவேள் மனுசரிதன்
மற்றிதனுக் காணத்தி வண்டமிழ்க் கோன்திக்கி
(93)பொற்றடம்பூண் மணிமார்பன் பொழிற்புல்லூ ரெழிற்பூசு
செய்யுந்து புன(94)ற்செறுவிற் செங்கழுநீர் மலர்படுகர் [ரன்
வைய்குந்த வளநாடன் வத்ஸகோத்ர சூடா(95)மணி
ஹரிசரண கமலசேகரன் ஆயிரத்தஞ் ஞூற்றுவன்
திருமகிழி லையனக்கன்(96) திசைநிறைபெரும் புகழாளன்
அவன்தலம் புகழுநிதி அவனுசூர் குலதிலகன்
தாதலர்(97)பூம் பொழிறழுவிச் சாலிவிளை வயல்வளத்தால்
மேதகுபுகழ் பேணவுஞ(98)ட்டு பெருநலூர்வெள்ளி எனப்
[பெயரிய
திருந்துபதிக் குடித்தலைவன் தெ(99)ன்னவன்திரு வருள்சூடிய
பெருநலூர் வெள்ளி கிழவனுகிய பெருந்தகை(100)செந் தனு
[கிழவன்
நலமலிசீர் நடுவுநிலை நன்குநா யகனுகவும்
அலர்(101)கமழும் பொனலளித்து நாட்டுக்கக் கிரமாகிய
முகி(ல்)தோய்பொழில் முசுக்குறி(102)ச்சி முற்கூடிப்பிறேர்கார்
[முளைய
அகனிலத்தோர் புகழளத்து நாட்டுக்கோன் னருந்(103)தமிழின்
பாத்தொகுதெருள் பயன்தருவோன் கொடைபயில்கற் பகசீலன்
சாத்தம்படர் தெ(104)னப்பெயுரிய தக்கோன் மிக்கோங்கு
கார்வயல்சூழ் களாத்திருக்கைப் பேரரண்சூழ் பெ(105)ருங்காக்
தலைவனுகிய குலக்குரிசில் தகுதேயு மாணிக்கம் [கூர்த்

கலைபயில் கிழவ(106)கோனும் கணக்கு ...கணக்கராகவும்
மாசில்வான் குடித்தோன்றிய ஆசிநாட்டு நா(107)ட்டாரும்
மச்சுறுபர மன்னுவந்த நெச்சுரநாட்டு நாட்டாரும்
உடனுகிநின் றெல்லை(108)காட்டப் பிடிசூழ்ந்த பெருநான்
[கெல்லை கீழெல்லை
புனல்புவனி புத்தேள்மா ருதம்(109)கனல் இருசுடர் எஜ
ஆகியதிற லஷ்டமூர்த்தி அமரர்க்கு மறிவரிஒன் [மானன்
வே(110)கவெள் விடைபாரதி பீஷ்மலோ சனன்மகிழ்ந்து(ங்)
(கோல்)பெய்வான் றிருவிருப்(111)பூர் முழிநின்று தென்கிழக்கு
[நோக்கிப்

பக்கம் 10.

போயின வெள்ளாற்றுக்கும் ஆயினபெ(112)ரு நலூர்ச்சிறைக்
பன்கள்ளி முரம்புக்கும் வண்ணத்தார் வளாகத்தி(113)ன் [கும்
நன்குயர்பரம் பீட்டுக்கும் நலமிகுகள் ளிக்குறிச்சி
மேலைக்கள்(114)ளி முரம்புக்கும் மேற்குநடை யாட்டிகுளத்தில்
சாலநீர் கோளுக்கும் இக்கு(115)ளத் தின்தென் கொம்பின்
மறுவாக்கும் பாங்கமைவடு பாறைக்கும் பயந்தருகுடி(116)நடை
ஏரி ஓங்கியவன குளத்தகம்பா
லலையொழுகிய வனபெருப்புக்கும்
இப்(117)பெருப்பை ஊடறுத்துச் செவ்வடு செழுங்கிழக்கு
[நோக்கி
வாரிக்கொள்ளி(118)க் கேய்போயின வழியதற்கும் வயல்மலிந்த
வாரிக்கொள்ளிக் குளத்தினீர் (119)கோளுக்கும் அடிகுழிக்கும்
தென்னெல்லை [மேக்கும்
திருமரு(120) நிலப்பாறைக்கும் செஞ்சாலி விளைகழனி
ஏரியணை வடக(121)டைக் கொம்பிற்கும் ஒழுகுகள்ளி முரம்புக்
[கும்
நீருடை (122)அறைய்ச்சுனைக்கும் ஊருடையான் குழித்தென்
[கடைக் கொ(123)ம்புக்கும்
நெடுமதிற்கற் ருழ்வுக்கும் நீர்மாற்றுத்தி (124)டலுக்கும்
கடிகமழ்பூந் தார்க்கணத்தார் குழிக்கும் வடக்கு
மே(125)லெல்லை
கூற்றன்குழி மீய்குழியேய் போயினபடு காலுக்கும்
போற்(126) றரு மாருத மாணிக் குளத்துக்கரைப் பெருப்புக்கும்
நாடறிநங்(127) கையார் குழியின்மீய் குழியேய்
காடதேரிக்கேய் போயின வழிக்(128) கு மேதமில்
லெறிச்சில் வழிக்கும் எழிலமை நெச்சுறநாட்
டோலை(129)குளத் தெல்லைக்கும் கிழக்கு மன்

வடவெல்லை
வளமிக்க மருத(130)(ம)லி இளநெச்சுறத் தெல்லைக்கும்
வெள்ளாற்றுக்கும் தெற்கு

பக்கம் 11.

இ(131)வ்விசைத்த பெருநான்கெல்லை உண்ணிலமொன் றொழி
[யாமல்
காராண்மை(132) மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச்
சீர்சான்ற திசையனைத்தி(133)ன் னெல்லைவாய்க் கன்னட்டித்
தருமங்களி னென்றுபயில் திருமங்கலத்(134)துச் சபையார்க்கும்
தொல்லைவண் சோமாசிகுறிச்சி மல்லன்மா மறையோர்(135)க்
[கும்
பிரமதேய ஸ்திதி வழாவகைப் ப்ருதுவியின்கண் ணிலைபெறுத்து
தர்(136)ம்மகர்ம்மப ராயணனுகிய தராபதி கொடுத்தருளிப்பின்
ஈண்டிய பெரும்(137)புகழேயுஞ் சாண்டில்ய கோத்திரத்து
எண்ணூர்புகழ் ஏகசந்தி காத்யாயன (138)கோத்திரத்து
வரிவண்டு மதுநுகர்பொழிற் சிரீவல்லப மங்கல(139)த்து
செப்பரிய செழுஞ்செல்வத் துப்பமவிரால் மேதக்க
க(140)லைபயில் கணஸ்வாமிபட்டற்கு தற்பெரு மாமதலை
உலவுசீர்த்தி(141) யோகேஸ்வர பட்டற்கு விசிஷ்டனுகிய
திருவடிச் சோமாசி(142)யென்னுஞ் சீர்மறையோன் மகள்பயந்த
திருமருசீர்ச் சிரீ(143)மாதவன் ஸ்ரீமாதவ சரணேஸ்வரன்
வேதவேதாங்கங்களும் விவி(144)தாசாரமும் தன்னேடுபிற
ரோதிக்கேட்டு தரப்பெய்த நீரைக்காமா சால்யனு(145)கி
பெருந்தகைப் பிரமதேயமிதற்கு பிரஸஸ்தி செய்தோற்கு
திருந்தியந(146)ன் பெருவயக்கலும் செழும்புனற் பருத்தி
[வயக்கலும்
இவ்வயல்களில்(147) கிணறிரண்டும் அக்கிணற்ருல் விளைநில
[னும்
மற்றவ்வூர் மாசபை ஓர்(148)பெற்றபரிசேய் கொடுத்தபின்
சீரியசெழும் பணிஇதற்குச் செப்பேடு வாச(149)கத்தை
ஆரியம்விராய்த் தமிழ்தொடுத்த மதிஓற்கும் அதுஎழுதிய
கற்(150)பமைந்த கரதலத்தவைச் சிற்ப மார்த்தாண்டற்கும்

பக்கம் 12.

மண்ணெங்கும் நிறைந்தவான்(151)புகழ் கண்ணங்கீரன்
திருஉலகு நற்சிங்க குளவளால் மருவியசோ [வயக்கல்
(152)மாசிவயக்கல்லென்னும் வயல்களிற் கிணறுகள்ளொரு
[மூன்றும்

எக்காலமும் மன்(153)னுக்கிணற்றில் விளைவயலனைத்தும் [இறையிலியாகவும்
சொல்லிய இக்கி(154)ணறு மூன்றின்னிடைக் கிடந்ததொன் [னிலமுழுவதும்
இல்லவளா லதுவாகவும் எழி(155)ன் மிக்கதோட்டமாகவும்
பால்லெருமை பெருவராலுகள் புனற்பதி இ(156)தனிற்
கோல்லுரிமையிற் செம்பாகமும் மஹாசபை குறிப்பொடு [கொடுத்துப்
பக(157)ல்செய்யும் பருதிஞாயிறும் இரவுச்செய்யும் பனிமதிஉம்
அகல்ஞாலமும் (158)உளவளவும் செப்பேடு செய்துகொடுத் [தருளினன்
மணிநீழ்முடி மன்பணிகழல் (159)வசுதாதிப வாசுதேவன்
அணிநீள வுய்த்தஹிதாகனி அசலாசலன் நவர்ஜ்யன்
கொந்த(160)லர்தார் கோச்சடையன் கூடற்கோன் குரு [சரிதன்
செந்தமிழ்க்கோன் ஸ்ரீநிகே(161)தனன் ஸ்ரீபராந்தக மக [ராஜன்
.... (16)2............ ....
(163)தேர்மிகுமாக் கடற்ருனைத் தென்னவர்கோன் றிருவரு [ளாற்
சீர்மிகு செப்பேட்டு(164)க்குச் செந்தமிழ்பாத் தொடைசெய் [தோன்
த்ருதஉகமெனும் ஊழிக்க(165)ண் அவிர்சடை முடிஅரன் [வேண்ட
நற்பரசு நிர்ம்மித்தவ னளிர்சடைமே லலங்கல்பெற்ற
(166)மாமுனிவன் வழிவந்தோன் பாமரு பண்டிதராசன்
பொன்வரன்றி மணிவரன்றி அ(167)கில்வரன்றிக் கரை [பொருபுனற்
றென்வைய்கை வளநாடன் செழுங்குண்டூர் நகர்த்தோன்றல்
பாண்டித்(168)தமி ழாபரண னென்னும்பல சிறப்புப்பெய [ரெய்திய
பாண்டிமாராயப் பெருங் கொ(169)ல்லனுகிய சிரீவல்லபன்
தென்னவர்தந் திறலாணைச் சிலைஒடுபுலி கயலி(170)ணமன்
பொன்னிமையச் சிமையத்து விறற்கருவியிற் றைக்குந்
தொழில்செய்து வந்(171)தவர்பின் ஞேன்செயல்பல பயின் [ஞேர் முன்ஞேன்
திருமலி சாசன் மிதற்குச் செ(172)ழுந்தமிழ்பா டிஞேனற்றை
நிருப சேகரப் பெருங்கொல்லன் நீள்புகழ் நக்கனெழுத்து.

ஆளத்தி.

சங்கீத வித்துவான் ப. சுந்தரேசன், குடந்தை.

ஆளத்தி எனும் இசைத் தமிழ்ச்சொல் வக்காணம் எனவும் இளங்கோவடிகளால் கூறப்பட்டதென விகாரி ஆனித் தமிழ்ப் பொழிலில் யாம் எடுத்துக்காட்டியிருப்பதைப் பொழிலன்பர் யாவரும் அறிவர்.

இசைத் தமிழில் ஆளத்தி என்பது, இசைகளை ஆளும் முறையெனப் பொதுப்பட நின்று பல்வேறு தொழில் முறைமைகளினால் புரிந்து காட்டப்படும் ஒரு செய்கையாகும். அது வினையம் எனப் பொதுமுறையில் கூறப்படுவதுமுண்டு. அவ்வாளத்தியின் தன்மை இருவகைப்படும்—ஒன்று, சிறந்த கருவிகளான் ஏற்படுவது; மற்றொன்று, குரலால் (கண்டத்தால்) ஏற்படுவது. இதனை இக் காலத்தில் ஆலாபனம் எனக் கூறுவது வழக்கு.

இவற்றுள் கருவியாற் புரியப்படும் ஆளத்தியும் இருவகையாகும். அது குழற்கருவியால் புரியப்படுவதும், யாழ்க்கருவியால் புரியப்படுவதுமென இருவகையது. குழற்கருவியின் தொழில் முறைமைகளும் குரலாற் பாடப்பெறும் வினை முறைமைகளும் ஏறத்தாழ ஒரு முறை பற்றியே நிகழ்வனவாகும். யாழ்க்கருவியின் தொழில் முறைமைகள் மட்டும் கைவிரல்களினாற் புரியப்படுவதால், அவை, பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் செலவு விளையாட்டு கையூழ் குறும்போக்கு எனும் எண் வகையால் இசையெழுப்பிப் பண் வகையாற் பரிவு தீர்ந்தபின், வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல் உருட்டல் தெருட்டல் அள்ளல் பட்டடை எனும் எட்டு வகையின் இசைக்கரணங்களால் நன்கு தொழில் புரிய, ஆளத்தி முறைகள் ஏற்படுவனவாகும்.

குழற்கருவியாலும் யாழ்க்கருவியாலும் செய்யப்படும் ஆளத்தியில் வெறும் ஒலி வகைகளே இருந்து விளங்கிக் கேட்போருக்கு இன்பம் பயக்குமேயன்றி, மற்றைய நிலையில் மொழிக்கு முதலியற்கையாகிய எழுத்துக்களின் வகைகளுக்கு ஆங்கு இடமில்லை. கண்டத்தால் (குரலால்) புரியப்படும் ஆளத்தி வகைகள், இசை முறைக்கும், இயல் முறைக்கும், ஆடல் முறைக்கும் உரிய எழுத்துவகைகளையே அடிமனையாகவும் முதன்மையாகவும் கொண்டு புரியப்படுவதால் மிகமிகச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்பெற்றன.

கண்டம் அல்லது குரல் எனப்படுவது, சிறப்புடைய உயிர் வகைகள் யாவற்றிற்கும் இருந்தும், மக்களினத்தில் இருபாலாரான ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவர்கள் உடலமைப்புக்கேற்றவாறு இயல்பாகவே அமையப்பெறுவதாகும்.

மேலும் அக்குரல் (சாரீரம்), நுண்ணிய அறிவோடு கூடிய சிறந்த நல்லதொரு பகுத்தறிவுங்கொண்டு கலைபயின்று—அதாவது, இசைக் கலையைச் சிறப்பாகப் பயின்று நெடுநாள் குறல் பயிற்சியுடையராய் ஒலியளவு முறைகளுக்கேற்ப இசைக் கருவிகளின் பயிற்சியுடையராயும் பல்வேறு வகையான இயல், இசை, ஆடற் பகுதிகளை விளக்கும் மொழிப் பயிற்சியுடையராயும், இயற்கை முறையில் விலங்கு, பறவைகளின் இயல்பான ஒலிவகைகளை ஓர்ந்துணரத்தக்க அறிவினையுடையராயும், செயற்கை முறைகளிற் பல்வகைக் குழற்கருவிகள், நரம்புக் கருவிகள் முதலானவற்றின் ஒலி வகைகளையும் உணர்பவராயும், இலக்கிய இலக்கணக் கணித முறைகளையும் ஆய்ந்து வாழ்வில் ஒரே குறிக்கோளினையுடையராயும் திகழ்ந்து, இடைவிடாது உழைத்துப் பயின்று வருபவரானவர்களுக்கே நாளடைவிற் சிறப்புற நன்கு தன் வயப்படுவதாகும்.

மக்களில் ஒரு சிலரே இம்முறையில் உழைப்பதற்கு உறுதி பூண்டு வரக்கூடும். அவ்வாறு உழைப்பதற்கே வாழ்க்கையில் பல்வேறு இடர்ப்பாடுகள் வந்தெய்தவும் கூடும் பண்டைய இசைத்தமிழ்க் குரல் வினைஞர்கள் பலரும் உடற்கூற்றின் நிலைகளையும் அவ்வவ் வுடலின் தட்ப வெட்ப நிலைகளையும் மருத்துவ முறைகளையும் சிறப்புற உணர்ந்திருந்தார்களென நன்கறியக்கிடக்கின்றது.

மிகப் பழங்காலத்தும், பிற்காலத்தும் நம் நாட்டில் இசை இலக்கண நூல்கள் எழுதிய பெரும்புலவர்கள் பலரும் மக்களின் உடற்கூற்று நிலைபற்றிக் கூறியிருக்கின்றனர். இக் காலத்திய தென்னிந்திய இசைக் கலைக்கு ஆதி இலக்கண நூலாக ஒரு சிலரால் மட்டும் கருதப்பெறும் சங்கீத இரத்தினகரம் (இசை மணிக்கடல்) எழுதிய சாரங்கதேவரும் மிகவும் விரிந்த முறையில் பிண்டோத்பத்தி எனும் உடற்கூற்று நிலையைக் கூறி இருப்பது நன்கறிந்ததொன்றே. இததகைய உடற்கூற்றின் நிலைபற்றி, இசை நுணுக்கம் எழுதிய சிகண்டியாரும் மிக விரிவாகக் கூறிப்போந்துள்ளார்.

மக்களின் உள்ளத்துணர்வால் மனம் முயன்று வளியையடக்கி வாங்கி எழுப்பும் ஒலியே, மிகச் சிறப்புற்ற ஒலிவடிவாகியும், பின்னர் அறிவின் திறமையினால் வரிவடிவாகியும், எல்லையற்ற நலன்கள் யாவற்றையுமுணரச்செய்து உலகிற்குப் பயன்தந்து விளங்குவதால் அதற்கியல்பான புற்கலம் (உடம்பு) பற்றியும் இசை நூல்களில் இன்றியமையாது கூறப்படுவதாயிற்று.

அத்தகைய துய்ய உடம்பு பற்றியும், உடம்பிலமைந்துள்ள மூலாதாரம் பற்றியும், அதனடியாகப் பிறக்கும் எழுத்தின் தன்மையையும் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய குறிப்புக்களாலும் நன்கறியலாம். அவை வருமாறு :—

“ துய்யவுடம் பாவன தொண்ணூற்ரு றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான்—வையத்
திருபாலு *நாற்பத் தெழுபாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்.

“என்பது இசைக்குப் பிறப்பிடமாயுள்ள ஆதாரமுணர்த்து கின்றது. சரீரத் தளவு தன் கையால் தொண்ணூற்ருறங்குலம். இதனுள் மேலே நாற்பத்தேழரையங்குலமும் கீழே நாற்பத்தேழரை யங்குலமும் விட்டு நடுநின்ற ஓரங்குலம் மூலாதாரம். இதன் மேலே நால்விரல்விட்டுப் பின் ஆதாரம் நின்றியங்குமெனக்கொள்க”.

“ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு—போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கிலேயாவ்
வந்தமே லோசையாம் வைப்பு”.

“ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தால்—துய்ய
ஒருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி
வருமா லெழுத்துடம்பின் வந்து”.

இவ்வாறு உடம்பின் வழி மக்களின் முயற்சியினுல் எழுப்பப்படும் ஒலியே எழுத்தாகும் என்பதை நன்குணரலாம். மக்களோ அன்றி பிறவுயிர்களோ முயற்சி செய்யாமல் இயல்பாகவே வானிற் கேட்கப் படும் காற்றின் உறழ்வு, இடி, போன்றவைகள் ஓசை எனக்கூறப் படும். ஓசையே முந்தியது என்பதையும், ஒலி பிந்தியது என்பதை யும் இரண்டும் தனித்தவை என்பதையும் உணர்த்தவேண்டி ஆளுடைய அரசும் “ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே” எனக் கூறிப்போந்தார். ஒலியினடியாகப் பிறந்துணர்ந்த எழுத்துக்களிலே ஆளத்திக்குச் சிறப்பாகக் கொள்ளவேண்டுமென்பது மிகப் பழந் தமிழ் மக்களின் நூற்றுணிபாகும். அத்தகைய ஆளத்தியாமாறு ணர்த்தும் பழைய நூற்பாக்களேயும் அடியார்க்கு நல்லார் சிறப்புற எடுத்துக்காட்டுவர். அவை,

“மகரத்தி ஞெற்ருற் சுருதி விரவும்
பகருங் குறிநெடில்பா ரித்து—நிகரிலாத்
தென்ன தெனவென்று பாடுவரே லாளத்தி
மன்னுவிச் சொல்லின் வகை”

* நாற்பதோ டேழ்பாதி.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,
தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

மாதவி

குறிஞ்சிப் பாட்டில் கபிலர் கூறும் பைங்குருக்கத்தியே மாதவி எனப்படும். இத்தொடருக்குப் பசிய குருக்கத்திப்பூ என உரை கூறிய ஆசிரியர் நச்சினர்க்கினியர்,

பயிலு மாதவிப் பந்தொன்யெய்தினன். சீவக சிந்–1322.

என்ற விடத்து, மாதவி = குருக்கத்தி என்பாராயினர். இதனைத் தாவர நூலார் ஹிப்டேஜ் மாடபிளோட்டா (Hiptage madablota, Gaertn.) என்றழைப்பர். இது மால்பிகியேசீ (Malpighiaceae)

147-ம் பக்கத் தொடர்ச்சி.

"முதற் பாடு மிடத்து மகரத்தினெற்றுலே நாதத்தை யுச்சரிக்குமரபு பகரிற் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில் செய்யும் இடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படும்."

"அவை அச்சு பாரணை என்று பெயர்பெறும். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து; பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து. அச்சு தாளத்துடன் நிகழும்; பாரணை கூத்துடன் நிகழும். ஆளத்தி செய்யுமிடத்துத் தென்ன என்றும், தென வென்றும், இரண்டசையுங் கூட்டித் தென்னதென வென்றும் பாடப்படும்" என்பதாம்

ஆளத்தி செய்யும் முறைமையான பழைமையை யுணர்த்துகின்றன மேற்கூறிய கருத்துக்கள். அதாவது—ஒரு இசைத்தமிழ்ப் புலவர் தனது மிடற்றினல் ஆளத்தி எனும் குரல் வினையப் பகுதியை ஒரு அவையிற் செய்துகாட்டுங்காலை முதன் முதலில், தான் வைத்துக் கொண்டிருக்கும் சுருதியோடு தனது குரலிசையைச் சேர்க்க வேண்டி மகர வொற்றுல் (ம்) தொடங்கவேண்டும் என்பதாம். பின்னர் தம் எனவும், தெம் எனவும் கூறிச் சேர்த்து, அதன் பின்னர் தம் நா எனவும், தெம்நா எனவும் கூறிக் குரலையும் சுருதியையும் ஒன்ருக்கிய பின்னரே, தென்னதென வென்று இரண்டசையுங் கூட்டி ஆகார ஈகார ஊகார வகைகளால் மெலிவு சமன் வலிவு எனும் மூவகை இயக்கத்தும் மெலிவு நான்கும் சமன் ஏழும் வலிவு மூன்றுமாகக் கொண்டு ஆளத்தி புரிந்து தொழில் செய்யப்படவேண்டும். இது பொதுமுறை. இவற்றை ஒழுங்காகவும் ஒவ்வொரு வரன்முறைப்படி அமைந்த இலக்கணங்களை உளத்திற்கொண்டும், இசைத்தமிழ்ப் பண்களின் இசை நிலை யறிந்தும் குற்றெழுத்தால் மட்டும் செய்யப் படுவது ஒன்று; இரண்டாவது, நெட்டெழுத்தால் செய்யப்படுவது. வரன்முறை வழுவாது குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படுவதுமுண்டு. இவையும் பல்வேறு வகைப்படும். இவற்றிற் கேற்றவாறு பெயர் வகைகளும் உண்டு. அவை யாவும் அவ்வப் பெயர்களுடன் விளக்கமாகப் பொழிலில் தனித்தனியே எழுதிவருவாம்.

என்ற தாவரக் குடும்பத்தின்பாற்படும். இதனை வன்மைமிக்க ஒருவகைக் கொடியெனக் கூறலாம். நெடிது நீண்டு வளரும் இயல் பிற்றாயினும் இது பற்றுக் கொம்பின்றித் தானே ஓங்கி வளராது. இதன் இவ்வியல்பினுல், வேறு கோல்கொண்டு பந்தரிட்டு அதன் மேல் இதனை வளரவிட்டால் நல்ல பந்தராக அமைந்து வளரும். இப்பல்கலைக் கழகத்துத் தாவரப் பூங்காவில் வேறொரு மரத்தின்மேல் இம்மாதவிப் பந்தர் அமைந்துள்ளது. இதன் இலைகள் நான்கு அங்குல முதல் ஒன்பதங்குலம் வரை நீளமும், ஒன்றரை முதல் இரண்டங்குலம் வரை அகலமும், நல்ல பச்சை நிறமும் உடையது. சற்றேறக்குறைய நுணா இலை போன்றிருக்கும். மாதவிப் பூங்கொத்து காணுதற்கழகானது. இணர் கணுக்குருத்தாகவும் நுனிக்குருத்தாக வும் வளர்தல் உண்டு. அரையங்குல முதல் முக்காலங்குலம் வரை நீண்ட இதன் பூ வெண்மையானது. புறவிதழ்கள் ஐந்தும் பசுமை யானவை. பூங்கொத்தின் அரும்புகள் புறவிதழ்களால் மூடப்பெற் றிருத்தலின் பசிய நிறம் தோற்றுமாக, இதனைப் "பைங்குருக்கத்தி" (குறிஞ்சி-92) என்றார் போலும். அகவிதழ்கள் ஐந்தும் அடியில் குறுகியும், நுனியில் அகன்று நொய்தான விளிம்புகளுடன் இருக்கும். இவற்றுள் ஓரிதழில் மட்டும் மஞ்சள் நிறம் விரவியிருத்தலின் மலர் கண்கவர் வனப்புடையது. பத்து கேசரங்கள் பொன்னிறத் தாது உகுத்து நிற்கும். சினைப்பை மூன்று பிரிவுகளையுடையது. பூவில் நல்ல மணமொன்றுண்டு. இதற்குரிய வண்ணநொசி எண் (Chromosome number) இன்னும் கண்டு சொல்லப்படவில்லை. ஹிப்டேஜ் (Hiptage) இனத்தில் (Genus) நான்கு வகையின (Species) ஆசியாவில் வெம்மை மிக்க விடங்களில் உள்ளன. மாதவி (Hiptage madablota Gaertn.) வெம்மைசான்ற இந்தியப் பகுதி களிலும், பர்மா, மலாக்கா, இலங்கை, சைனு, ஜாவா முதலிய விடங்களிலும் காணப்படுகின்றது. நந்தமிழ் நாட்டில் மாதவியை ஒத்த மற்றொரு வகைச் செடியும் இருக்கின்றது. அதனை ஹிப்டேஜ் பார்விபுளோரா (Hiptage ParvifloraW. & A.) என்றழைப்பர். இதன் இலைகள் மாதவியின் இலைகளைக்காட்டிலும் குறுகி நீண்டும், பூக்கள் சிறியனவாகவும் இருக்கும். மாதவிக் கொடி கன்னட மொழி யிலும் மாதவி எனப்படும். உரியா மொழியில் இதனை மாதபி என்றும் மாதபிளோதோ என்றும் அழைக்கின்றனர். இதனைக் கொண்டுதான் தாவர நூலில் இதற்கு மாடபிளோட்டா (Madablota) என்ற வகைப் பெயர் சூட்டப்பெற்றுள்ளது.

மாதவிக் கொடி நவம்பர், டிசம்பர் மாதங்களிற் பூக்குமென்பர். பூத்த சில நாட்களில் இதழ்கள் உதிர்ந்து பூவிணர் பொலிவிழந்து காணப்படும். இந்நிலையில் நின்ற குருக்கத்திச் செடியைக் கண் ணுற்ற கோவலன் தனது பிரிவினுல் நலனிழந்து வாடும் தனது காதற் கணிகை மாதவியை ஒத்திருத்தலின் நீயும் மாதவியை ஒத்த மாதவியாயினை என்று தன் உள்ளக்கிடக்கையைப் புலப்படுத்துவா னயினன்.

தவருன தமிழாராய்ச்சிகள்.

(ஒரு கடிதம்)

பேராசிரியர், அ. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., பி. எல்.,

மாஸ்கோ.

"பொழில்" ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். அடுத்த "பொழில்" இதழில் அடியிற்கண்ட கடிதத்தை வெளியிடும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழுலகம் இதிற் சுட்டிய உண்மைகளை நன்கு சிந்திப்பதாக!

''பொழிலின்'' வைகாசிமாத இதழைப் படித்தேன். அதில் மயிலை—சீனி. வேங்கடசாமி அவர்கள், "சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். கட்டுரையாளர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டின் இலக்கிய, வரலாற்று ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கும் ஓர் அறிஞர்.

மேற்குறிப்பிட்ட கட்டுரையில், கட்டுரையாளர் காலஞ்சென்ற திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை யவர்கள் எழுதிய "தமிழ் மொழி, தமிழ் இலக்கிய வரலாறு" என்ற நூலிற்கண்ட சில தவறுகளை எடுத்துக்காட்டியுள்ளார். திரு. பிள்ளை யவர்கள் அந்த நூலை "History of Tamil Language and Literature" என்ற பெயரிட்டு ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

பிள்ளையவர்களுடைய நூலைப்பற்றி முன்னமே எனக்கு ஏற்பட்டிருந்த மனத்துயர் திரு. வேங்கடசாமி அவர்களின் கட்டுரையில் அப்படியே காணப்பட்டது.

திரு. பிள்ளையவர்கள் செய்த தவறுகளையும் திரு. வேங்கடசாமி யவர்கள் அவற்றை எடுத்துக்காட்டிய விதத்தையும் நான் இங்கு விவரிக்கப்போவதில்லை. அது எனது நோக்கமன்று.

ஆனால் கட்டுரையாளர் ஓரிடத்தில் "இந்த நூலிலே பிள்ளை யவர்கள் பல தவருன கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர்......இந்த நூலைப் படிக்கின்ற வெளிநாட்டவர் தவருன கருத்துக்களை உண்மை எனக் கருதிக் கொள்ளுகின்றனர்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வரிகளைப் படித்தபோது இவற்றை நானே எழுதியதுபோல் எனக்குப்பட்டது. கட்டுரையாளர் குறிப்பிட்ட செய்தி நூற்றுக்கு நூறு உண்மை. இதை நான் இங்கு ஐரோப்பிய

நாட்டில் கண்ட அனுபவத்தில் எழுதுகிறேன். குறிப்பாக, இந்த நூலுக்கு இரையான மாஸ்கோ நண்பர்கள் பலர்.

திரு. பிள்ளையவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கவுணர்வு உண்டு. அவரது ஆராய்ச்சி முடிவுகள் சிலவற்றை அவருக்கு நேராகவே நான் மறுத்திருக்கிறேன். அவரது ஆராய்ச்சிகளால் தமிழுக்கு விளைந்த நன்மைகளைவிடத் தீமைகள் பலமடங்காகும்.

இலக்கியம், வரலாறு, மொழிநூல் ஆகிய சமுதாய நூல்களை (Social Sciences) விஞ்ஞான மனப்பான்மையோடு அவர் ஊடுருவி ஆராய்வதில்லை. அவரது ஆராய்ச்சிகள் ஒரு வழக்கறிஞரது கற்பனை வாதம்போல இருக்குமே தவிர, ஒரு சமுதாய விஞ்ஞானிக்குரிய உண்மை ஆராய்ச்சியாக இருப்பதில்லை. அவரது ஆராய்ச்சியால் தமிழ் இலக்கிய வரலாறு, மொழி வரலாறு இவ்விரண்டும் பாழ்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டவர் பலர் இவரது நூல்களைப் படித்துவிட்டுத் தவருன கருத்துக்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதை நான் நேரில் அறிவேன். இந்த நிலைக்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். கடந்த 35 ஆண்டுகளுக்குள் தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழ் வரலாறு முதலியவை பற்றி இந்தத் தவருன நூலைத் தவிர ஆங்கிலத்தில் எழுதப்பட்ட "முழு நூல்கள்" வேறு கிடையாது. இது ஒரு மூல காரணமாகும்.

இந்த நிலையில் திரு. பிள்ளையவர்கள் பல்கலைக் கழகப் பேராசிரியராக இருந்து செய்த இத்தகைய மாபெரும் பிழைகளை ஆராய்ச்சியுலகம் என்றும் மறக்க முடியாது. இந்திய மொழிகளைப்பற்றி வெளிநாட்டறிஞர்கள் அதிகக் கருத்துச் செலுத்துகின்ற இந் நாளில், ஆங்கிலத்தில் தமிழைப் பற்றிய திருத்தமான நூல்களை வெளியிட வேண்டும்.

இந்தப் பணியைத் தமிழ் அறிஞர்கள் மட்டும் செய்ய இயலாது. தமிழ்நாட்டுப் பதிப்பகங்களும் இதற்கு ஒத்துழைத்து உதவவேண்டும்.

இல்லையானல், திரு. பிள்ளையவர்கள் எழுதிய நூலைப்போன்ற தப்புத்தவருன ஆராய்ச்சிகள் தமிழ் செய்த பாவத்தின் உருவமாக வந்து உலவிக்கொண்டிருக்கும். இதைப் பல்கலைக் கழகங்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் தமிழ்ப் பதிப்பகங்களுக்கும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

சிற்றிலக்கியம் : 2.

ஆற்றுப் படை.

மது. ச. விமலானந்தம், எம். ஏ.,

தமிழ் விரிவுரையாளர், சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சை.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற இனிய பண்பி னின்றும் எழுந்தனவே இன்று நாம் காணும் ஆற்றுப்படை நூல்கள். நல்வழிப்படுத்தும் நேரிய உள்ளம்—பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சம்படைத்த படைப்பே ஆற்றுப்படைச் செல்வங்கள். தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு களிக்கும் கலைஞர்கள் தந்த கலைக்களஞ்சியங்களே—கற்பனைக் கருவூலங்களே—இவ் வாற்றுப் படைப்பனுவல்கள் எனலாம்.

வாழ்ந்தாலும் பேசும்; தாழ்ந்தாலும் ஏசும்; இஃது இவ்வுலக இயல்பு. பிறர் இன்னல் கண்டு—ஏழ்மை கண்டு எள்ளி நகையாடு வதே இந்நாளைய நாகரிகம். பிறர் வாழப் பொறுக்காத போக்கினது இவ்வுலகு. அதிலும் பிறரது ஏற்றம் கண்டு தூற்றும் நிலையே எங்கும் விளங்கக் காண்கிறோம். தாம் ஏற்றமும் தோற்றமும் அமைய வாழ்வது போன்று ஏனையோரும் வாழ்வதை விரும்பாது—தாம் வாழப் பிறர் தம் ஏவல் செய்யுமாறு விழைவதே இவ்வுலகம். பிறர் துயர் துடைத்து, துன்பம் நீக்கி, வசியும் வளனும் சிறக்க வழி விடுவதோ அரிது; அதிலும் தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ நேர்ந்த வகையினைப் பிறருக்குக் கூறித் தன்னைப் போன்று பிறரை யும் வாழ்விக்க வாழ்த்தும் பண்போ அதனினும் அரிது. இவ்வரிய பண்பு பண்டைத் தமிழர்பாற் பாங்குற—சிறப்பாகச் செந்நாப் புலவரிடத்து, சிறப்புற—அமைந்திருந்தது. அதன் பயனே ஆற்றுப் படை அமுதங்கள்.

வாழ்க்கைப் பாதையில் இன்னல் பலவும், இடர் சிலவும் உற்று, அல்லலுற்று ஆற்றாது அலமந்த பின்பு, போதிய வளமும் போற்றத் தக்க உதவியும் பெற்ற பெருமக்கள், அங்ஙனம் வாய்ப்போ வளதியோ பெறாது நலிந்து மெலிந்து வாட்டமுறுவோர்க்கு வழிகாட்டுவது வேண்டற்பாலது; தாம் உற்ற துயரத்தை எண்ணித் தம்மையொத்த பிறரும் தம்போல் துன்பந்தீர்ந்து இன்பம் பெறவேண்டிய நிலை யறிந்து அன்னவர்தம் வாட்டந்தீர வழிப்படுத்துவது தம் கடமை யெனத்தெளிவதே தெள்ளியோரின் பணியும் பெற்றியுமாகும்; அக் கடமையை ஆற்றுவது அறவுணர்வின்பாற்பட்ட அருட்செயலாகும். இங்ஙனம் கடமை யுணர்ந்த அறவுணர்வினர்தம் அருட் சாயலே ஆற்றுப்படையாக அரும்பியதெனலாம்.

இச் சிறப்பினதாய—சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் அடியவர் சிந்தையுள்ளும் உறைவான் உயர் கூடலில் ஒப்பவீற் றிருந்து ஒண்தீந்தமிழாய்ந்த நல்லிசைப் புலமைச் செல்வர்கள் அளித்த ''ஆற்றுப் படையின் அமைதியினை அறிவது ஏற்புடைத்து

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்.

(தொல்-புறத்திணை—36.)

என ஒல்காப்புகழ் தொல்காப்பியரும், 'ஆடன் மாந்தரும் பாடற் பாணரும், கருவிப் பொருநரும், இவருட் பெண்பாலாகிய விறலியும் என்னும் நாற்பாலரும், தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்' என உரை யாசிரியர் இளம்பூரணரும் எடுத்தியம்புவது கொண்டும் ஆற்றுப் படையின் அமைதியினை அறியலாம். பின்னர் எழுந்த பாட்டியல் போன்ற நூல்கள் கூட,

புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர், பாணர்,
பொருநர், விறலியர், கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடு,ஊர், பெயர்,கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை.

(பன்னிரு பாட்டியல்—202)

என விரித்துக் கூறல் காண்க.

உள்ளி உள்ளி உவந்தீயும் வள்ளல் ஒருவனிடம் பெரும் பொருளைப் பரிசிலாகப் பெற்று மகிழ்வுடன் மீளும் புலவர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் போன்றோர் வழியில் எதிர்ப்பட்ட—பரிசில் பெற விழையும்--இரவலர்க்குத் தம் வறுமை நீக்கிய வள்ளலின் பெருமையை எடுத்துக் கூறி, அவ்வள்ளியோனிடம் சென்று தாம் பெற்றமை போன்றே பெருஞ் செல்வம் பெறுமாறு அவரை வழிப் படுத்துமாற்றான் புரவலனுடைய நாடு, ஊர், பெயர், புரவலன் பண்பு, அவனைக் காணும் முறை, பெறத்தகும் பரிசில் என்பன போன்றவற்றை இனிது எடுத்தோதி வழிப்படுத்துவதே (ஆறு--வழி; படை--படுத்துதல்) ஆற்றுப் படையாகும்.

பொருநனை ஆற்றுப்படுத்துவது பொருநராற்றுப்படை; பாணனை ஆற்றுப்படுப்பது பாணாற்றுப்படை; விறலியை ஆற்றுப்படுத்தல் விறலியாற்றுப்படை; கூத்தரை ஆற்றுப்படுப்பது கூத்தராற்றுப் படை; புலவரை ஆற்றுப்படுப்பது புலவராற்றுப்படை எனவும் வகைக்கேற்பப் பெயர் பெறுகின்றது, இவ்வாற்றுப்படைச் சிற்றிலக்கியம்.

ஒவ்வொருவரும் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை இரவலர்க்கு உணர்த்தி நெறிப்படுத்துதற்கு உரியவரேயாயினும், பாணர், பொருநர், விறலியர், கூத்தர், புலவர் ஆகியோரை ஆற்றுப் படுத்து வதாகச் செய்யுள் புனைவதே கவி மரபாகும். இங்ஙனம் ஆற்றுப் படுத்தப்படுவோர் தரமும் திறமும் கொண்டே ஆற்றுப் படைகள் பெயர்பெற; சிலர், பாணர், பொருநர், விறலியர், கூத்தர், புலவர் போன்றுரை ஆற்றுப்படுத்துதற்கு உரியவர்கள். முறையே பாணர், பொருநர், விறலியர், கூத்தர், புலவர் என்ற தகுதியுடைத் தக்கோரே எனக்கூறுவர். அங்ஙனம் அறுதியிட்டு உறுதி கூறுதற்குப் பண்டை இலக்கணங்களோ, இலக்கியங்களோ இடம் தருமாறில்லை. எனவே ஆற்றுப் படுத்துவோர் பற்றிய வரை யறை இல்லை; ஆற்றுப் படுத்தப்படுவோர் பற்றிய வரையறையே உண்டென உணரலாம்.

ஆற்றுப் படையின் ஆட்சியினையும், அருமைப் பாட்டினையும் பத்துப் பாட்டின் தொகுப்பும் தோற்றமும் கொண்டே உணரலாம். முதற்கண் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கினையும் முறையே முன் நிறுத்தி, வேறு பாடல்கள் ஐந்தினை அடுத்து அமைத்து, இறுதியில் கூத்தராற்றுப்படையைக் கொண்டிலங்கும் தொகுப்பு முறையும்; பத்துப் பாடல்களிற் செம்பாதி ஆற்றுப் படை யாக அமைந்திருப்பதும்; 'ஆற்றுப் படைப்பத்து' என உரை யாசிரியர்கள் சிலர் உவந்து அழைக்குமாறும் அமைந்திருப்பது பத்துப்பாட்டு.

இங்ஙனம் பத்துப்பாட்டில் செம்பாகம் ஆற்றுப்படையாக அமைவதோடன்றி புறநானூற்றில் 48, 49, 141; 64, 103, 105, 133; 68, 69, 70, 138, 155, 180 போன்ற பதின்மூன்று படல்களும், பதிற்றுப்பத்தில் 66, 67; 40, 49, 57, 60, 78, 87 போன்ற எட்டு பாடல்களும் ஆற்றுப் படைத்துறையில் அமைந்துள்ளன. (159-ம் பக்கம் பட்டியல் பார்க்க.) இதுவன்றி, பேரிலக்கியங்கள் பலவற்றுள் இவ் வாற்றுப் படைத்துறை சாயலில்—சார்பில்- சில பல செய்யுட்கள் பயிலப்பட்டிருத்தலும் ஈண்டு எண்ணத்தக்கது. இதனுல் ஆற் படையின் அருமையும் பெருமையும் அறியலாம்.

தோலாப் புகழ் தொல்காப்பியமே இச் சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளதெனின் அதற்குப் பன்னூற்றுண்டுகட்கு முன்னரே இவ்வகை இலக்கியங்கள் மிகுந்திருந்த மாட்சி இனிது போதரும். அன்றியும் தமிழின் தனிச் சிறப்பினதாய பொருளிலக் கணத்துள், புறப்பொருளில் இவ்வாற்றுப்படை ஓர் இன்றியமையாத துறையாய் அமைந்த அருமைப்பாடும் அறிந்து இன்புறத்தக்கது. இதனுல், இவ்வாற்றுப்படை இலக்கியங்களின் தொன்மையும், மேன்மையும், ஒண்மையும் உயர்வும் உணர்ந்தோம்.

இனி, இவ் வாற்றுப் படை இலக்கியத்தின் அமைதியும் அழகும், போக்கும் நோக்குங் காண பம்பு புகழ் கம்பன் தந்த கவிதை யொன்றே போதிய காட்டாகும்:

தேரு ஊப்புரவி வார ணத்தொகுதி
திறைகள் கொண்டுவரு மன்ன! நின்
தேய மேதுனது நாம மேதுபுகல்
செங்கை யாழ்தடவு பாணகேள்!
வாரு மொத்தகுடி நீரு நானுமக
தேச ஞறைநகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்;

நீரு மிப்பரிசு பெற்று மீளவர
லாகு மேகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரு நிற்குமொரு வேம்பு நிற்குமுயர்
பனையு நிற்குமத னருகிலே
அரசு நிற்குமர சைச்சு மந்தசில
வத்தி நிற்குமடை யாளமே". (பெருந்தொகை-1192.)

இங்ஙனம் அழகும் அமைதியும் மிக்க—மக்களிடத்துப் பெரிதும் பயின்று பயன் விளைவித்துவந்த-இவ்வித்தகக் கவிப் போக்கை-பாவின் பாங்கைக் கண்ணுற்ற பிற்காலப் புலவர்கள் இப்பாமுறை கொண்டு மக்களிடத்து ஏற்ற மாற்றத்தை எளிதே புகுத்தலாயினர். எண்ணம் திண்ணியதாகையால் எண்ணியவாறே, பொருள் பெற புலவர்பால் ஆற்றுப் படுத்துவதைவிட, அருள்பெற ஆண்டவன்பால் ஆற்றுப் படுப்பது சாலச்சிறந்ததென எண்ணி ஆண்டவன்பால் நீண்ட காதலும் நெகிழ்ந்த நெஞ்சமும் கொண்டு புதிய ஆற்றுப் படை வகைகளைப் புனைவாராயினர். அங்ஙனம் அரும்பியனவே திருமுருகாற்றுப்படை, திருத்தணிகையாற்றுப்படை, சங்கர சற்குரு ஆற்றுப் படை போன்றன. இன்னும் சொற்பொழிவாற்றுப்படை, காதலி யாற்றுப்படை, தேனுற்றுப்படை போன்ற தேனமுதப் பாக்களும் இப் புதுமுறை போக்கில் அமைந்தனவே. (159-ம் பக்க அட்டவணை யால் அறிக.)

இலக்கியத்தைப் பாகுபடுத்துமாற்றுன் ஐந்தாகப் பிரிப்பர்: அவை, தனி ஒருவனுடைய அனுபவநிலை (Experience of an individual as an individual); மனிதனுடைய பொது அனுபவம் (Experience of a man as a man); மனிதனுக்கும் மனிதருக்கும்

இடையே அமையும் தொடர்பு (Relations of the individual with his fellows); மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ளத் தொடர்பு (Our relation with the external world of nature); மனித னுடைய சொந்த முயற்சியும் உணர்ச்சியும் (Man's own effort and emotion) என்பதாகும். இவற்றில் ஏனைய வெல்லாம் தமிழில் அமைய, மூன்றுவதாகிய மனிதனுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய நூல்கள்—பிரயாண நூல்கள், செலவு பற்றிய செய்திகள் (Books on travel and guides) தமிழ் இலக்கியத் தில் இல்லையே என எள்ளி நகையாடுவர் சிலர்; இந்நாளில் திரு. வி. க; மு. வ; சோம.லெ; முன்னுள் மேயர் இராமசாமி நாயுடு; ஏ. கே. செட்டியார்; ஜி. டி. நாயுடு போன்ருர் எழுதிய செலவு நூல்கள் போன்று பண்டைக் காலத்தில் இல்லையே எனக் குறை கூறுவர் சிலர். அவர்கட்கு ஏற்ற வாயடைப்பு இவ் வாற்றுப் படை நூல்கள் எனலாம்; தாம் நேரில் கண்டறிந்த நாடு, ஊர் பற்றிய செய்திகளைப் பிறரும் அறியுமாறு எடுத்தியம்பிப் பின்னர் அவண் செல்வோர்க்கு வழிகாட்டியாக ஆற்றுப்படை விளங்குவது கொண்டு இவ் வுண்மை யுணரலாம். இதனுல் ஆற்றுப்படையின் சிறப்பு அறியப்பெறும்.

இனி, ஏனை ஆற்றுப்படை நூல்களுக்கும், திருமுருகாற்றுப் படைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குவாம். ஏனைய ஆற்றுப் படைகள் பொருட் பரிசில் விழைந்து போந்த கலைச் செல்வர்களின் கருத்தோவியங்கள் என்ருல், திருமுருகாற்றுப்படை அருட்பரிசு அவாவும் அருட்செல்வரின் அரிய படைப்பு எனலாம். ஏனையவற்றில் பாட்டுடைத் தலைவர்களாக முடியுடை வேந்தரும், குறுநில மன்னர் களும் அமையவே ஆற்றுப்படுக்கப் படுவோரால் அவை பெயர் பெற்றன; ஆனுல் முருகாற்றுப்படையோ அருட் சிறப்பு காரணமாகப் பாட்டுடைத் தலைவன் பெயரால் பெயர் பெறுகிறது. வீடு பேறு விழையும் ஒருவரை முருகன் அருளால் அந்தமில் இன்பத்து அரசாள் ஞானம் கைவரப் பெற்ற அருட் செல்வர் ஒருவர், அறுமுகன்பால் ஆற்றுப் படுத்துவது பற்றிப் பேசுகின்றது முருகாற்றுப்படை; இங்கே ஆற்றுப் படைக்கு இடனுகும் வகையான்—ஆற்றுப்படுப்பது என்ற பொருள்பட, முருகன் அருள்வழிப் படுவது—முருகன் வழிப் படுவதாவது அவனுறையும் இடமறிந்து அவண் சென்று வழிபடுவது என்ற முறையில் அருள் முருகன் பெயரால் திருமுருகாற்றுப்படை எனப் பெயர் பெற்றது. இதனை ஒத்தனவே திருத்தணிகையாற்றுப் படை போன்றனவும்.

கூத்தராற்றுப்படை என முன்னர் பெயர் பெற்ற ஆற்றுப்படை, பின்னர் வந்த ஒருவரால் சொற்ருெடர் சிறப்பு நோக்கி மலைபடு கடாம் எனப் பெயர் பெற்றது என்றும், அதுபோன்றே முருகனிடத்து ஆற்றுப் படுத்தப் படுவோன் புலவனுதலின் அவன் பெயரால் வழங்கிய புலவராற்றுப் படையே பின்னர் திருமுருகாற்றுப்படை என

கவிதை.

(திருவத்திபுரம், வித்துவான், மா. தேவராசன்)

1. கவிதையும் கார்மேகமும்.

ஊர்க்காவல் செய்துநம் உள்ளங் குளிர்வித்துச்
சீர்க்கா தலர்க்கின்பம் சேர்த்தலால்—பூக்கோதாய்
பார்மேல் உயர்ந்தோர் இடத்திற் படிவதால்
கார்மேகம் நற்கவிதை காண்.

2. கவிதையும் காவிரியும்.

நானிலத்தும் சென்றணிகொள் நன்னடையும் கொண்டுலகோர்
மேனிலைகொண் டுய்ய மிகவழங்கி—வானிலையாய்ச்
சோர்வகற்றிப் பூங்காய் நிழல்கனியு மாவுற்றுக்
காவிரியும் நற்கவிதை யாம்.

3. கவிதையும் கதிரவனும்.

செங்கதிரும் நற்கவியும் ஒன்றுகும் செப்பக்கேள்
இங்கிரண்டும் உள்ளிருளை யேநீக்கும்—தங்குஞ்சீர்
பேர்பலவுங் கொண்டு பிறழா(து) அடிவரையுற்று
ஆர்வமளித் தின்பூட்டு மால்.

156-ம் பக்கத் தொடர்ச்சி.

வழங்கலாயிற்று என்றும் அறிய வருகின்றது. இதற்குப் பின்னர் எழுந்த பிரபந்த இலக்கணங்களே போதிய சான்று பகர்கின்றன:

"புலவராற் றுப்படை பத்தேட்கு முரித்தே".

(பன்னிரு பாட்டியல்–204.)

"இருங்கண்வானத் திமையோருழைப்
பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று".

(புறப்பொருள் வெண்பாமாலை)

"விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
அரும்பெறற் புலவரை ஆற்றுப் படுத்தலும்".

(இலக்கண விளக்கம்)

இதுகாறும் ஆற்றுப்படை அரும்பியமை, அதன் இலக்கணம், ஏற்றம், தோற்றம், அழகு, அமைதி, வகை, தொன்மை, மேன்மை, பயின்று வரும் பண்டைப் பனுவல்கள், அதனை யொட்டி இந்நூற்றுண்டில் எழுந்த நூல்கள் அனைத்தையும் கண்டோம். இனி ஆற்றுப் படையால் அறியப்படுவனவும் அவற்றின் அழகும் சுவையும் காண்பாம்.

(வளரும்)

நூல்	பாடல் எண்	ஆற்றுப்படை	பாடினோர்	பாடப்பட்டோர்
புறநானூற்றுப் பாடல்கள் (12)	48	புலவராற்றுப்படை (2)	பொய்கையார்	சேரமான் கோக்கோதை மார்பன்
	141	,,	பரணர்	வையாவிக்கோப் பெரும்பேகன்
	64	விறலியாற்றுப்படை (4)	நெடும்பல்லியத்தனார்	பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
	103	,,	அவ்வையார்	அதியமான் நெடுமானஞ்சி
	105	,,	கபிலர்	வேள் பாரி
	133	,,	உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்	ஆய்
	68	பாணாற்றுப்படை (6)	கோவூர் கிழார்	சோழன் நலங்கிள்ளி
	69	,,	ஆலத்தூர்கிழார்	சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
	70	,,	கோவூர்கிழார்	,,
	138	,,	மருதனிள நாகனார்	நாஞ்சில் வள்ளுவன்
	155	,,	மோசிகீரனார்	கொங்கானங்கிழான்
	180	,,	கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்	ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறன்

நூல்	பாடல் எண்	ஆற்றுப்படை	பாடினோர்	பாடப்பட்டோர்
பதிற்றுப்பத்துப் பாடல்கள்	66	பாணாற்றுப்படை (2)	கபிலர்	செல்வக்கடுங்கோ வாழியாதன்
	67	,,	,,	,,
	40	விறலியாற்றுப்படை (6)	காப்பியாற்றுக் காப்பியனார்	களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்
	49	,,	பரணர்	கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
	57	,,	காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
	60	,,	,,	,,
	78	,,	அரிசில் கிழார்	பெருஞ்சேரல் இரும்பொறை
	87	,,	பெறுங்குன்றூர் கிழார்	இளஞ்சேரல் இரும்பொறை
பத்துப்பாட்டில் (5)	1	திருமுருகாற்றுப்படை	நக்கீரர்	முருகவேள்
	2	பொருநராற்றுப்படை	முடத்தாமக் கண்ணியார்	சோழன் கரிகாற் பெருவளத்தான்
	3	சிறுபாணாற்றுப்படை	இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்	ஓய்மாநாட்டு நல்லியக் கோடன்
	4	பெரும்பாணாற்றுப்படை	கடியலூர் உருத்திரங் கண்ணனார்	தொண்டைமான் இளந்திரையன்
	10	கூத்தராற்றுப்படை	பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார்	நன்னன்சேய்-நன்னன்

எண்	ஆற்றுப்படையின் பெயர்.	ஆசிரியர் பெயர்
1	ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை	தே. ஆ. ஸ்ரீநிவாசாச்சாரியார்
2	ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிகர் ஆற்றுப்படை	இராம. கோவிந்தசாமிப் பிள்ளை
3	ஸ்ரீ சங்கர சற்குரு ஆற்றுப்படை	திராவிடக் கவிமணி வே. முத்துசாமி ஐயர்
4	சிவஞான பாலய சுவாமிகள் ஆற்றுப்படை	ஆ. சிவலிங்கனார்
5	திருத்தணிகை யாற்றுப்படை	கச்சியப்ப முனிவர்
6	ஞானியார் அடிகள் ஆற்றுப்படை	கவிராச பண்டிதர் ரா. திம்மப்பையர்
7	சொற்பொழிவாற்றுப்படை	பால்வண்ண முதலியார்
8	தேனாற்றுப்படை	Dr. அ. சிதம்பரநாதச் செட்டியார்
9	ஆசானாற்றுப்படை	கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை
10	மாணுக்கராற்றுப்படை	சி. இலக்குவனார்
11	புலவராற்றுப்படை	திருக்குருகூர் சிறியரெத்தின கவிராயர்
12	மதுரைச் சங்கத்துப் புலவராற்றுப்படை	குலாம் காதிறு நாவலர்
13	புலவராற்றுப்படை	அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை
14	காதலியாற்றுப்படை	Dr. கணபதி பிள்ளை (இலங்கை)
15	செந்தமிழ்ச் செல்வி யாற்றுப்படை	?